**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 - 2017**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 2 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3029-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு, 3030-எஸ்ஆர்ஜ-(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு மற்றும் செயற்திட்ட நிர்வாக கைநூலின் V ஆம் அத்தியாயம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 59.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 15.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது மிகுதி ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் அல்லது 25.4 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் செய்யப்பட்ட அவதானிப்புக்களை கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ச்சியான அடிப்படையில் காட்டக்கூடியவாறு போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணபங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்ததென்றும்

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 182.41 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலையின் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் பெறுகைகளிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 67.29 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.44 மில்லியன் கூட்டு தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கடனளிக்கும் முகவர்களின் நிதிக் தைவிர்ப்பு பட்டியல்களின் பிரகாரம், ரூபா 16.68 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 108,553 கூட்டுத் தொகையான கைதவிர்ப்புகள் 2017 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் அக்கொடுக்கல் வாங்கல்களை இணக்கம் செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கொழும்பு நகரத்தின் தெற்கு மற்றும் மேற்குப் பிராந்தியங்களின் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பு கூறின் கீழ் கைச்சாத்திடப்பட்ட மாதிரி ஒப்பந்த உடன்படிக்கைகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.3 ஆம் பந்திக்கு முரணாக வரிசை அமைச்சு செயலாளருக்குப் பதிலாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 88 | 11,440 | 79.95 | 10,394 | 1,446.20 | 9.38 | 1,453.89 | 16.49 | 2,512.59 |
| இலங்கை அரசாங்கம் | 30 | 3,900 | 27.10 | 3,523 | 450.40 | 2.68 | 416.61 | 3.47 | 535.24 |
| மொத்தம் | 118 | 15,340 | 107.05 | 13,917 | 1,896.60 | 12.06 | 1,870.50 | 19.96 | 3,047.83 |

ரூபா 10,394 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 79.95 மில்லியனில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,512.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16.49 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கை தொடங்கிய திகதியிலிருந்து 03 ஆண்டுகளும் 04 மாதங்களும் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் குறித்த காலப்பகுதிக்குள் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் அமுலாக்கலிற்கான விரிவான திட்டம் இன்மை காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டமானது 13 கூறுகள் கொண்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றமானது ஒப்பந்தங்கள் வழங்கக்குவதிலுள்ள தாமதம், ஒப்பந்தகாரர்களின் குறைவான செயலாற்றல் மற்றும் குறைவான செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற காரணங்களால் 5.61 சதவீதமாக மாத்திரம் இருந்தது என்பதை செயற்திட்டதின் முன்றேற்ற அறிகை குறிக்கின்றது. மேலும், பாமன்கடையிலுள்ள அப்பகுதி பொறியியலாளர் அலுவலகம் கட்டிட நிர்மாணம், அரசாங்கம் உடமையாக்கப்பட்ட தொடர்மாடி வீடுகள், மேற்கு மத்திய பிரதேச ஆதார சேவைகள் அலுவலகத்திற்கான 02 தொகுதி செயற்பாட்டு உபகரணங்களிற்கான கொள்வனவு என்பவற்றிற்கான ஒப்பந்தங்கள் 2017 திசெம்பர் 31 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு நகரத்தின் மேற்கு மற்றும் தெற்கு பிராந்தியத்திற்காக வருமானமற்ற தண்ணீரிற்கான புனரமைப்பு முறைமை மற்றும் சமூக நடமாடும் விழிப்புனர்வுகள் மற்றும் நடத்தை மாற்றங்கள் என்பவற்றிற்கான ஆலோசனை சேவைகள் என்பவற்றிற்கான கூறுகளின் கீழ் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 இல் பட்டியலிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதிக்குப் பின்னால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கொழும்பு நகரத்தின் பிராந்தியத்திற்கான வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான ஒப்பந்தத்தின் கொள்வனவை பூர்த்தியாக்குவதற்குரிய ஒப்பந்தம் முற்பணமளிக்கப்பட்ட கொள்வனவாக கடனளிக்கும் முகவரால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் 504 நாட்கள் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், முறையான தீர்க்கமான அளவைகளின் அடிப்படையில் ஆரம்ப கட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் நெகிழ்ச்சித்தன்மையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இதன்விளைவால், கொழும்பு நகரத்தின் மேற்கு பிராந்தியத்திற்காக வருமானமற்ற தண்ணீரிற்கான முறைமை புனரமைப்பின் கீழ் 99 கிலோமீற்றர் நீளமாக மதிப்பிடப்பட்ட குழாயிடல் 194.5 கிலோமீற்றர் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

(இ) ஒப்பந்த கேள்வி ஆவணத்தின் பிரகாரம், வேண்டப்பட்ட நோக்கங்களிற்கான மதிப்பாய்விற்கான பொருட்களின் பயன்பாடு மீதான உற்பத்தி உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் ஈடுபடுகின்ற பிரதான நபர்களின் விபரங்கள் கேள்வி சமர்ப்பித்தலின் இறுதி திகதியில் உள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொழும்பு நகரத்தின் மேற்கு பிராந்தியத்திற்காக வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பு கூறின் கீழான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 01 இல் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை திகதிவரையும் உரிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 13 மாதங்கள் கடந்த பின்னர் 9.57 சதவீதமான மெதுவான பௌதீக முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், மீற்றரிடுகின்ற 18 மாவட்ட பகுதிகளின் நீரியல் நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவான வடிவமைப்பு மற்றும் 02 பிரான ஊட்டல்கள் என்பவற்றிற்கான சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 சனவரி 10 இல் வழங்கப்பட்ட கொழும்பு நகரத்தின் தென் பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரபைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் 09 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளின் பிரதான ஊட்டல் முறைமை மற்றும்

விரிவான வடிவமைப்பிற்காக நீரியல் நவீனமயப்படுத்தலின் கீழான வேலைகளும் 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அளவையிட வேண்டுமென இலக்கிப்பட்ட 35,000 வீடுகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உட்படுத்தப்பட்ட 15,894 வீடுகள் அளவையிடப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2019 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 155 கிலோமீற்றரில், 02 கிலோமீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டமானது சமூகங்களின் இயலளவைக் கட்டியொழுப்புதல் கூறின் கீழ் 65 மீற்றரிடல் பகுதிகளில் விழிப்புணர்வுகள் மற்றும் நன்னடத்தை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பட்டியலிட்டிருந்ததுடன் அவற்றில் 2016 யூன் 30 இல் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், விழ்ப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 யூலையிலேயே தொடங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தண்ணீர் பாவணையாளர்களிற்கான பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மீது தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை மாத்திரம் கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இனங்காணப்பட்ட விடயங்கள் போன்றவற்றிற்கான சிபார்சுகள் மற்றும் தீர்வுகள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு பொதியின் கீழ் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை அத்துடன் அதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருகைதந்த பின்னர் தண்ணீர் பாவணையின் முறையில் மாற்றங்களை மதிப்பிடுவதற்கு குறிப்பிடப்பட்ட பொறிமுறை எதுவும் இருக்கவில்லை.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பாமன்கடை பகுதி பொறியியலாளர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக குத்தகை அடிப்படையில் 2015 செப்தெம்பர் 02 இல் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி 2017 ஆகஸ்ட் மாதத்தில் அவற்றில் மீது செய்யப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையான முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கொழும்பு மா நகர சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், அலுவலக கட்டிடத்தின் கட்டிட வடிவமைப்புகளில் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட இன்னொரு ரூபா 2.11 மில்லியன் முற்பணம் உரிய காணி மாற்றியமை காரணமாக பயனற்றதாக இருந்தது.

## 3.5 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் வேண்டுகைக்கு முரணாக பதில் கடமை அடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்) பதவிக்காக செயற்திட்டப் பணிப்பாளரை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் நியமித்திருந்தார்.